DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.68/21

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name வினோத்குமார் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.09.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கோடாங்கிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஊர்காவல் படையில் வேலை செய்து வருகிறேன். 3.2.21ம் தேதியன்று காலை 8.00 முதல் 8.30 மணியளவில் சொந்த வேலைக்காக வடபுதுப்பட்டியிலிருந்து தேனிக்கு சென்றுக்கொண்டிருந்தேன். எனக்க எதிரே கோபி கிருஷ்ணா டைல்ஸ் கடை அருகே விபத்து ஏற்பட்டது. TN 59 PT 0526 என்ற எக்சல் வண்டி மீது ஆம்னிவேன் எண். TN 20 BX 9060 என்ற ஆம்னிவேன் வந்து தேனி பெரியகுளம் ரோட்டில் பின்புறமாக வந்து இடித்துவிட்டது.டிவிஎஸ்எக்சலில் வந்த சந்தானம் என்பவர் வலது பக்கமாக திரும்பும் போது அவருக்கு பின்னால் வந்த ஆம்னிவேன் அவரை கடந்து செல்லும் அவர் மீது மோதிவிட்டது. அதில் கிழே விழுந்துவிட்டார். அவருக்கு தலை, கை, கால், தோள்பட்டையில் இடுப்பு பகுதியில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அங்கிருந்த ராஜேஷ்கண்ணன் என்பவர் இறந்தவரின் மகனுக்கு போன் பண்ணி தகவல் சொன்னார். அதற்கு இறந்த நபரின் உடலை ஆம்புலன்ஸில் ஏற்றி தேனி கவிலக்கு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதற்கு பிறகு போலிசில் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.